இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
# பாதுகாவலன்
PAATHUKAVALAN
Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633
மலர் : 147 | இதழ் : 16 | திகதி : 08.10.2023 | விலை : 50.00

# 16வது உலக ஆயர்கள் மாமன்றம் ஆரம்பமாகியது

16வது உலக ஆயர்கள் மாமன்றமானது திருத்தந்தை பிரான்சிசின் கூட்டுத்திருப்பலியோடு வத்திக்கானில் உள்ளூர் நேரம் காலை 9.00 மணிக்கு இலங்கை நேரம் பகல் 12.30 மணிக்கு ஒக்டோபர் 04ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகியது.

16வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் தயாரிப்புப் பணிகள், உலக அளவில் 2021ம் ஆண்டு அக்டோபர் 10ம் திகதியிலிருந்து 2023ம் ஆண்டு ஒக்டோபர் வரை நடைபெற்று வந்தது. 2022ம் ஆண்டு ஏப்ரல் வரை மறைமாவட்ட அளவிலும், 2022ம் ஆண்டு செப்டெம்பரிலிருந்து, 2023ம் ஆண்டு மார்ச் வரை கண்டங்கள் அளவிலும் இத்தயாரிப்புப் பணிகள் நடைபெற்றன. உலகளாவிய திருஅவையின் இறுதிக்கட்டப் பணிகள், 2023ம் ஆண்டு அக்டோபர் 4 புதன்கிழமை தொடங்கி அக்டோபர் 29 ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைகின்றன.

தெளிந்துதேர்தலின் கால அளவு நீட்டிக்கப்பட்டுள்ளதால், 16வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் முதல் கூட்டத்தொடர், 2023ஆம் ஆண்டு அக்டோபர் 4ம் தேதி முதல் 29ம் திகதி வரையிலும், இரண்டாவது கூட்டத்தொடர் 2024ஆம் ஆண்டு அக்டோபரிலும் இடம்பெறும் என்று திருத்தந்தை அறிவித்தார்.

இத்தீர்மானம், ஒருங்கிணைந்து பயணம் என்பதைப் புரிந்துகொள்வதற்கு உதவியாக

02

# ஏழ்மையிலும் தேவையிலும் வாழ்வோரோடு எம்மை அடையாளப்படுத்தி வாழ்வோம்

## புனித வின்சன்டி போல் பெருவிழாவில் யாழ் ஆயர்



யாழ். மறைமாவட்ட புனித வின்சென்ற் டி போல் மத்திய சபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட புனித வின்சென்ற் டி போல் திருவிழாவும் புதுப்பித்தல் ஆண் டுக்கான பிரகடனமும், மத்தியசபையின் 40 ஆது பொதுக் கூட்டமும் யாழ்ப்பாணத்தில் 29 ஆம் திகதி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ் ஆயர் தலைமையில் விழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத் திருவிழாத் திருப்பலியில் ஆயர் அவர்கள் தமது மறையுரையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஆயர் தமது மறையுரையில் மேலும் தெரிவிக்கையில், வின்சென்ற் டி போல் தமது வாழ்வில் ஏழ்மையில் தேவையில் உள்ளோரை மையப்படுத்தியே வாழ்ந்தார். சிறப்பாக ஏழைகள் மட்டில் மிகவும் அக்கறை உள்ளவராகவும், ஏழைகளுக்கும் கைவிடப்பட்டவர்களுக்கும் உதவி செய்வதிலுமே தனது வாழ்வையும், பணியையும் மையப்படுத்தி வாழ்ந்தார்.

எம்மை மையப்படுத்தி அல்ல மாறாக பிறரை மையப்படுத்தியே

02

# செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் திருச்சொரூபம் திறப்பு

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் வளாக வாயிலில் அமைக்கப்பட்டுவந்த புனிதரின் வரவேற்ப திருச் சொருப கட்டுமாணப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அதன் திறப்பு விழா 28ஆம் திகதி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை டியூக் வின்சன் அவர்கள் அழகிய தோற்றத்துடன் அமைந்த வரவேற்பு திருச் சொருபத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பங்குவாழ் மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

# பாசையூர் பங்கில் சம்மிக்கேல் நாட்டுக்கூத்து



பாசையூர் பங்கின் அன்பிய விழா கடந்த செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி கொண்டாடப்பட்டது இரண்டு மாத அன்பிய ஆயத்தங்களின் நிறைவாக அன்பியங்களால் இணைந்து வெவ்வேறு நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. நிறைவு நிகழ்வாக சம்மிக்கேல் நாட்டுக்கூத்து அரங்கேற்றப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மறைக்கோட்ட அன்பிய இணைப்பாளரும் நாவந்துறைப் பங்குத் தந்தையுமான அருட்தந்தை ஜேசுரட்ணம் கலந்து சிறப்பித்தார். அனைத்து நிகழ்வுகளையும் பங்குத்தந்தை அருட்பணி எம்.ஜெறோ செல்வநாயகம் அடிகளார் சிறப்புற ஒழுங்கு செய்திருந்தார்.

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பும் நிகழ்வு



கடந்த 14.09.2023 அன்று தரம் 05 2022 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 9 மாணவர்களுக்கான கௌரவிப்பும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் மாலை 1.00 மணிக்கு அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னைநாள் பாடசாலை அதிபரும் கரைதுறைப் பற்றுக் கோட்டக்கல்விப் பணிப்பாளருமான திரு T.சிறிபுஸ்பநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மேலும் முல்லை மறைக்கோட்ட முதல்வர் புனித சூசையப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி A.P.அன்ரனிப்பிள்ளை புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.பாஸ்கரன், யாழ்ப்பாணம் புனித வளனார் அச்சக முகாமை யாளர் அருட்பணி S.A. றொஷான், தேசகீர்த்தி லயன் ஜெயதாஸ் நிர்மலகாந்த, பழைய மாணவர் ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்கெடுத்தனர்.

சாதனையாளர்கள் 09 மாணவர்களுக்கும் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினரால் தலா ரூபா பத்தாயிரம் வைப்பில் இடப்பட்ட, வங்கிக் கணக்குப் புத்தகம் உறவுகளால் வழங்கப்பட்டது. 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 34 மாணவர்களுக்கு பரிசுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

# அம்பிட்டிய தேசிய உயர் குருத்துவ கல்லூரிக்கு புதிய அதிபர்



கண்டி அம்பிட்டிய தேசிய உயர் குருத்துவக் கல்லூரியின் புதிய அதிபராக அருட்தந்தை குயின்ரஸ் பெர்னான்டோ அவர்கள் அண்மையில் நியமனம் பெற்றுள்ளார்.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர் கடந்த காலங்களில் நீர்கொழும்பு BCI உயர்கல்வி நிறுவனத்தின் துணை அதிபராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி தனது புதிய பணிப் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## 2009 இற்குப் பின்னரான ஈழத்தமிழர்களின் விழுமியங்கள்?

2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்கு உள்ளிட்ட இலங்கைத்தீவில் இனரீதியான வேறு-பாடுகளும் மதக்குரோதங்களும் வெவ்வேறு வியூகங்களில் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

எண்பது வருட அரசியல் விடுதலைப் போராட்டத்தில் சுமார் முப்பது வருடங்கள் ஆயுதப் போரில் ஈடுபட்ட ஈழத்தமிழ்ச் சமூகம் தற்போதுதான் மெதுமெதுவாகப் பொருளாதார ரீதியிலும் மற்றும் வாழ்க்கை முறையிலும் முன்னேறி வருகின்றது.

இப் பின்னணியில் சமூக விழுமியங்களுக்கு மாறான சில பண்புகளை சில தீய சக்திகள் திட்டமிட்டு இளையோர் மத்தியில் பரப்பி வருகின்றன. இது மிக ஆபத்தானது. பொது அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

நிரந்தர அரசியல் தீர்வு எப்போது கிடைக்கும் அல்லது முன்வைக்கப்படும் என்று கூற முடியாது. தமிழ்த் தேசியக் கட்சிகளும் தேர்தலில் வெற்றி பெற்றுத் தத்தமது ஆசனங்களை அதிகரிக்கும் நோக்கில் தேர்தல் வியூகங்களில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றன.

ஆகவே சிவில் சமூக அமைப்புகள் சமூக விழுமியங்களைப் பேணக்கூடிய விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் இல்லையேல் போதைப் பொருள் பாவனை உள்ளிட்ட சமூகச் சீர்கேடுகள் நாளுக்கு நாள் அதிகரிக்கும் ஆபத்துக்கள் உருவா-கும்.

விழுமியங்கள் என்ற சொல்லுக்கு நாம் பல்வேறு பொருள் கொள்ள முடியும். ஏனெனில் விழுமியம் என்பது மனிதனது முழுமையான வாழ்க்கையாகும். விழுமியம் என்ற சொல்லிற்கு ஆங்கில அகராதியில் (Value) என்று சொல்லப்படுகின்றது. இதன் பொருள் 'மதிப்பு' ஆகும். ஒரு பொருளின் தகுதி என்ற கருத்தினை வெளிப்படுத்துகின்றது.

அதாவது மனிதனின் வாழ்க்கையை மதிப்புக்கு உரியதாக மாற்றுவது விழுமியங்கள் என்ற கருத்தினை வழங்குகின்றது. விழுமியம் என்ற சொல்லிற்குத் தமிழ் மொழியில் பல அர்த்தங்களுள்ளன.

அதாவது சிறப்பு, உயர்வு, சீர்மை, நன்மை போன்ற கருத்துக்களைத் தெளிவுபடுத்துகின்றன. ஆகவே விழுமியம் என்பது ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும்? எவ்வாறு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்? என்பதனைக் குறித்து நிற்கின்றது.

அதாவது மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகின்றது. அதுவும் முப்பது வருடப் போரின் பின்னரான சூழலில் இந்த விழுமியங்களை எவ்வாறு பேண வேண்டும் என்பது தொடர்பாகத் திட்டமிடல் ஒன்றை வகுக்க வேண்டும்.

அதுவும் அரசியல் விடுலை இன்னமும் கிடைக்காத பின்னணியில் ஈழத்தமிழ்ச் சமூகத்துக்குரிய விழுமியங்களை சாதி சமய வேறுபாடுகளுக்கு அப்பால் ஒருங்கிணைத்துப் பேண வேண்டிய முறைகள் அது பற்றிய போதனை முறைகள் மிகவும் அவசியமாகின்றன. இதனாலேயே இன்று விழுமியக்கல்வி பாடவிதானத்தில் முன்னுரிமைப்படுத்தப்படுகிறது.

விழுமியங்கள் வழியே வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் போது வாழ்வு சிறப்பாக அமையும். ஒரு சமூக மதிப்பீடாக விழுமியங்கள் என்பது தனிநபர், சமூகம், வாழ்க்கை என்பவற்றை வெளிப்படுத்துகின்ற அர்த்தமுள்ளதாகும். அதாவது இப்படித்தான் வாழ வேண்டும் என்பதனை சமூக நீதிக்காக ஒருவருடைய வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு விழுமியங்கள் கற்றுத் தருகின்றன.

ஈழத் தமிழர்களின் இலக்கியங்கள் போர்க் கால இலக்கியங்கள் 2009 இற்குப் பின்னர் படைக்கப்பட்ட இலக்கியங்கள் ஊடாகவும் ஈழத்தமிழர்களின் வரலாற்றின் ஊடாகவும் விழுமியங்கள் பற்றிய உரையாடல்களை இளையோர் மத்தியில் ஆரம்பிக்க வேண்டும். தற்போதைய காலகட்டத்தில் மனித வாழ்க்கையானது உள்ளங்கைக்குள் சுருங்கிவிட்டது. தகவல் தொடர்பு சாதனங்களின் ஆதிக்கம் காலையில் சூரியன் உதிப்பது முதல் மறையும் வரை மனித வாழ்க்கையை ஆக்கிரமிக்கின்றது. ஒரு தாயின் கருவறையில் உருவாகுவது தொடக்கம் கல்லறை வரைக்கும் தகவல் தொடர்பு சாதனங்களின் ஆக்கிரமிப்பு உள்ளது.

குடும்பத் தலைவன், தலைவி, குழந்தைகள் என அனை-வரையும் தகவல்தொடர்பு சாதனங்கள் தன்பக்கம் ஈர்த்துக் கொண்டிருக்கின்றன. இதனால் மனிதனுடைய உண்மையான விழுமியப் பண்புகள் சுருக்கி விட்டன.

ஆகவே விழுமியங்கள் பற்றிப் போதிப்போர் இது பற்றியும் கவனத்தில் எடுக்க வேண்டும். மனிதன் தனது எண்ணங்களைத் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதன் மூலம் அவற்றைச் சரிவரக் கண்காணித்து நிர்வகிப்பதன் மூலம், நன் முறையில் நெறிப்படுத்துவதன் மூலம் செம்மையான எண்ணங்களை உருவாக்கலாம். தவறான எண்ணங்களைத் தவிர்க்கவும் முடியும்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## யாழ். மறை மாவட்ட குருக்களுக்கான பணித்தள இடமாற்றங்கள்

யாழ் மறைமாவட்டத்தில் பணிபுரியும் மறைமாவட்டக் குருக்கள் சிலரது பணித்தள இடமாற்றங்கள் யாழ் ஆயர் பேரருள்திரு.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் வழங்கப்பட்டுள்ளது. இவ் இடமாற்றங்கள் ஜப்பசி மாதம் முதல் நடைமுறைக்கு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 அருப்பணி. T. ரவிராஜ் | - இயக்குநர் | - புனித ஜோசப் வாஸ் இறையியல் கல்லூரி |
| 2 அருட்பணி.B.J.A. பிறாஜன் | - இயக்குநர் | - இளையோர் ஆணைக்குழு |
| 3 அருட்பணி. T. செல்வரட்ணம் | - இயக்குநர் | - புனித மாட்டினார் குருமடம் |
| 4 அருட்பணி. A.J.A. ஜெயரஞ்சன் | - ஆன்மீக இயக்குநர் | - யாழ் பல்கலைக்கழகம் |
| 5 அருட்பணி. S. சுதர்சன் | - பொறுப்பாளர் | - மறைமாவட்ட இணையத்தளம் |
| 6 அருட்பணி. ஜேசுதாசன் சந்திரன் | - பங்குத்தந்தை | - மண்டைத்தீவு |
| 7 அருட்பணி. G. அருள்நேசன் | - பங்குத்தந்தை | - திருநெல்வேலி |
| 8 அருட்பணி. எமில் R. போல் | - பங்குத்தந்தை | - அளம்பில் |
| 9 அருட்பணி.M.M.H. ஞானேந்திரன் | - பங்குத்தந்தை | - நல்லூர் |
| 10 அருட்பணி.M. கான்ஸ்போவர் | - பங்குத்தந்தை | - கூளாமுறிப்பு |
| 11 அருட்பணி. J.A. அருள்தாசன் | - பங்குத்தந்தை | - ஒட்டகப்புலம் |
| 12 அருட்பணி. P. பத்திநாதர் | - பங்குத்தந்தை | - நெடுந்தீவு |
| 13 அருட்பணி.S. அலின் கருணாகரன் | - பங்குத்தந்தை | - மாரீசன்கூடல் |
| 14 அருட்பணி.K. தயாதீபன் | - பங்குத்தந்தை | - முழங்காவில் |
| 15 அருட்பணி.S. யூட் கமில்டன் | - பங்குத்தந்தை | - எழுவைதீவு |
| 16 அருட்பணி.G.V. பிலேந்திரன் | - உதவிப் பங்குத்தந்தை | - குருநகர் |
| 17 அருட்பணி.R. றெனால்ட் | - உதவிப் பங்குத்தந்தை | - குருநகர் |
| 18 அருட்பணி. J.A.A. நியூமன் | - உதவிப் பங்குத்தந்தை | - பேராலயம் |
| 19 அருட் பணி. A. ஜோண் கனிசியஸ் | - உதவிப் பங்குத்தந்தை | - பேராலயம் |

புதிய பணித்தளங்களில் பணிப் பொறுப்பேற்கும் குருக்களை பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## ஆயர்கள் மாமன்றம்




ஆயர்கள் மாமன்றம் என்பது தற்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவோ அல்லது கருத்துக்களை வழங்குவதற்காகவோ நடக்கும் நண்பர்களின் சந்திப்புக் கூட்டமல்ல என்றும், ஆயர் மாமன்றத்தின் முக்கியமான நபராக தூய ஆவ-யார் இருந்து செயல்படுகின்றார், நம்மை வழி நடத்துகின்றார் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கத்தோலிக்க அச்சகத்துக்கு
வேலையாட்கள் தேவை
முகாமையாளர்

## சிற்பக் கலைஞர் கிறிஸ்ரியன் காலமானார்



குருநகரைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் ஆசீர்வாதம் கிறிஸ்ரியன் அவர்கள் கடந்த 20.09.2023 அன்று கிளிநொச்சியில் காலமானார்.

இவர் யாழ் மறைமாவட்டத்தில் பல ஆலயங்களில் புனிதர்களின் உருவச் சிலைகளை தத்துரூபமாக வடிவமைத்தவர். சாட்டி சிந்தாத்திரை அன்னை திருத்தலத்தில் வடிவமைக்கப்பட்ட திருச்சிலுவைப் பயண நிலைகளை வடிவமைத்தவரும் இவரே.

அன்னாரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனை மன்றாடுகின்றோம்.

## ஏழ்மையிலும் தேவையிலும்..

(1ம் பக்கத் தொடர்ச்சி..)

நாம் வாழவேண்டும் என்று அழைப்பு விடுத்தார். திருப்பலியின் இறுதியில் புனித வின்சென்ற் டி போல் சபை முதன் முதலில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட (1905) யாழ். மறைமாவட்டத்தில் தேசிய ஆன்மீக இயக்குநர் அருட்பணி மைக்கல் இராஜேந்திரம் அவர்களால் புதுப்பித்தல் ஆண்டு பிரகடனம் செய்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து மத்திய சபையின் 40 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் முகமாக பேராலய வளாகத்தில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

தொடர்ந்து பாதுகாவலன் மண்டபத்தில் மத்தியசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இடம்பெற்றது.

தொடர்ந்து வின்சென்ற் டி போல் மத்திய சபை தலைவி மரியநாயகி அவர்களின் தலைமையில் வருடாந்தப் பொதுக்கூட்ட நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் புனித வின்சென்ற் டி போல் தேசிய சபையின் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை மைக்கல் இராஜேந்திரம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ்.மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், உள்ளூ ராட்சி அமைப்புக்களின் இயலளவை மேம்படுத்தல் திட்டம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட முக-ாமையாளர் திரு. யூட் வோல்டன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டதுடன் மன்னார் மறைமாவட்ட மத்தியசபையின் ஆன்ம ஆலோசகர், இரத்தினபுரி மறை மாவட்ட மத்தியசபைத்தலைவி, தேசியவின்சென்ற்டிபோல்சபைத் தலைவி, மறைக்கோட்டவின்சென்ற்டிபோல்உறுப்பினர் கள் எனப் பலரும் கலந்து நிகழ்வை சிறப்பித்தனர்.

## 16வது உலக ஆயர்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி..)

இருக்கும், மற்றும் நற்செய்தியின் மகிழ்வுக்குச் சான்றுபகரும் சகோதரர் சகோதரிக-ளின் ஒன்றிணைந்த பயணமாக அனைவரும் வாழ்வதற்கு உதவும் என்று திருத்தந்தை கூறியுள்ளார். அக்டோபர் 4 புதன்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் புதிதாக நி-யமனம் செய்யப்பட்ட கர்தினால்கள் 120 பேரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் இணைந்து கூட்டுத்திருப்பலியினை நிறைவேற்றினர். அவர்களோடு கர்தினால்கள் அவை உறுப்பினர்கள் 320 பேர், உலக ஆயர் மாமன்றத்தின் உறுப்பினர்கள், அருட்பணியாளர்கள் மற்றும் பொது நிலையினர் பலரும் கலந்து கொண்டனர். உரோம் உள்ளூர் நேரம் காலை 8.30 மணிக்கு வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகள் ஒருங்கிணைந்து செபமாலையைச் செபித்தனர். அதன்பின் புனிதர்கள் மன்றாட்டானது பாடப்பட கூட்டுத்திருப்பலி நிறைவேற்ற புதிய கர்தினால்கள் மற்றும் கர்தினால்கள் அவை உறுப்பினர்கள் திருப்பலிப் பீடத்தை நோக்கிப் பவனியாக வந்தனர். வருகைப் பாடலைத் தொடர்ந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலத்தீன் மொழியில் திருப்பலியினைத் துவக்கினார். அக்டோபர் 4 இயற்கையின் பாதுகாவலரான புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழாவையும் அவரது பெயரைத் தனது பெயராகக் கொண்டு சிறப்புடன் பணியாற்றும் நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பெயர்கொண்ட திருநாளையும் திருஅவை சிறப்பித்து மகிழும் வேளையில் இந்த 16ஆவது உலக ஆயர்கள் மாமன்றமானது ஆரம்பமாவது மிகச் சிறப்பாகத் திகழ்கின்றது. திருத்தூதர் பவுல் கலாத்தியருக்கு எழு-திய நூலிலிருந்து எடுக்கப்பட்ட முதல் வாசகமா-னது இஸ்பானிய மொழியில் வாசிக்கப்பட்டது.

# "கனவு காண்போம்"

கரைவையூர்ச் செல்வம்

**விளைவுகள்**

நாம் எந்தவொரு பெரிய முடிவையோ, தீர்மானத்தையோ எடுக்கும் பொழுது நாம் விரும்பியோ விரும்பாமலோ அந்த முடிவினால் ஏற்படும் பின் விளைவுகள் உண்டு. அவை சில நன்மையாகவும் இருக்கலாம், இன்னும் சில நன்மை அற்றவையாகவும் இருக்கலாம். வேறு சில சில சந்தர்ப்பங்களில் தீமையாகவும் இருக்கலாம். இவை, சூழலையும் எடுக்கும் தீர்மானங்களையும் பொறுத்தே அமையும். உதாரணமாக ஒருவர் திருமணம் செய்வதாக முடிவெடுக்கின்றார். இந்த முடிவின் விளைவுகள் எவை, இன்னொருவருடன் இணைந்து வாழ்தல், வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து வாழ்தல், ஒருவர் பால் ஒருவர் அன்பு செய்து, கருணைகாட்டி ஆதரவளித்து வாழ்தல், காலப் போக்கில் நண்பர்களாக வளர்ந்து ஓர் ஆன்மீகத் தேடலிலும் இணைந்து, வாழ்க்கைப் பயணத்தில் உடன் பயணிகளாகப் பயணிக்கலாம். பிள்ளைகளைப் பெற்று அன்புடன் வளர்த்து, அவர்களால் பெருமைப்பட்டு, தியாகங்கள் செய்து வாழ்வில் உயரலாம். இவற்றையெல்லாம் நன்மைகளாகவே பார்ப்போம்.

மறுபக்கத்தில், தன்னிச்சையாக வாழ முடியாமை, விட்டுக் கொடுத்து வாழ்வதிலுள்ள பிரச்சினைகள், பெற்றோரை விட்டுப் பிரிந்து வாழ்தல், கணவன் வீட்டிலோ மனைவி வீட்டிலோ (கலாசாரத்திற்கேற்ப) வாழவேண்டிய நிலைமை, மாமன் மாமி ஆகியோரின் நச்சரிப்புகள் என்று பல இழப்புகளும், கடினங்களும். இவை நன்மையற்றவையாகவே கருத்தில் கொள்வோம். முன்கூட்டியே இப்பிரச்சினைகள் பெருமளவில் தெரிந்திருக்குமாயின், அவற்றைக் கையாளும் முறையை முன்கூட்டியே உதவியுடன் பெருமளவில் தீர்த்துக் கொள்ளலாம். வந்த பின் தீர்ப்பதை விட வரமுன் காப்பது சிறப்புடையதல்லவா? உளவளத்துணையிலும், ஆன்மீக உடன் பயணிப்பிலும் நான் இதைச் செய்வதுண்டு.

குருத்துவதைத் தெரிவு செய்யும் முடிவானாலும் சரி, துறவற வாழ்வைத் தெரிவு செய்யும் முடிவாக இருப்பினும் இந்த அணுகுமுறை பேருதவியாக அமையும்.

**சீர்திருத்தங்கள்**

போப் பிரான்சிஸ் செய்யும் சீர்திருத்தங்களாலும் ,அவர் காணும் பாரிய கனவை நனவாக்கும் பொழுதும் பின் விளைவுகள் உண்டு. இந்தப் பின் விளைவுகளை முன்கூட்டியே உணர்ந்து அவற்றிற்குப் பயந்து, தங்கள் வாழ்க்கை முறையை மாற்ற வேண்டி வருமே என்று ஏங்கிப் பின்வாங்கி, போப் பிரான்சிஸ் அவர்களுடைய சீர்திருத்தங்களையும் கனவையும் எதிர்ப்போர் சிலர் இருக்கிறார்கள். பின் விளைவுகளுக்கு தாங்கள் பயப்படுவதாக இவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இச் சீர்த்திருத்தங்களால் கனவால் வரக்கூடிய விளைவுகளை முன்நோக்கிப் பார்த்து, தாம் எச்சரிப்பதாகவும், விவேகமாக இருப்பதாகவும், மூடிய திருஅவையை மூடியே வைத்துக் காப்பாற்ற வேண்டுமென்றும் ஒரு தோற்றத்தைத் தருவார்கள். பின்னர், இந்த சீர்திருத்தங்கள் நடைபெறக் கூடாதென்று உறுதியாக முட்டுக்கட்டைகளாக மாறுவார்கள். இவற்றிற்குப் பின்னால் தங்கள் அதிகாரத்தையும், சுகபோக வாழ்வையுமே இவர்கள் காப்பாற்றுகிறார்கள் என்பன உற்றுநோக்குவோருக்கு உள்ளங்கை நெல்லிக்காயாகத் தெரியும். சீர்திருத்தங்களாலும், கனவாலும் வரக்கூடிய நன்மைகளை இவர்கள் நினைக்கவும் மாட்டார்கள். எடுத்துக் கூறினாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மேலும் இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் பின்னர் ஏற்பட்ட சில பின்விளைவுகளைச் சுட்டிக்காட்டி, இரண்டாவது வத்திக்கான் சங்கம் நடந்ததே தவறு என்று கூறி அச்சங்கத்தை இன்றுவரைஎதிர்க்கிறார்கள்.

**அப்படி என்ன விளைவுகள்?**

**1.** அநேக குருக்களும் துறவிகளும் தங்கள் குருத்துவத்தில் இருந்தும் துறவறத்தில் இருந்தும் விலகினார்கள். உண்மை ஆயினும், அதற்குரிய காரணங்களை ஆழமாக ஆய்வு செய்யத் தவறிவிட்டார்கள்.

2. தென் அமெரிக்காவில், தங்கள் சமூக அரசியல் சூழலுக்கேற்ப, அங்குள்ள சில இறையியலாளர்கள் விடுதலை இறையியலை (Liberation Theology) உருவாக்கினார்கள். இது, ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. தொடக்கத்தில் இருந்தே வத்திக்கான் - உரோமை இந்த விடுதலை இறையியலை எதிர்த்தது.

3. அதேபோன்று இந்தியா, ஆபிரிக்க இறையியலை உருவாக்கும் முயற்சியில்




இந்திய - ஆபிரிக்க இறையியலாளர் முயன்றனர்.

4. இதில் முன்னின்ற இந்திய இறையியலாளர் திருவழிபாட்டிலும் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து, இந்தியப் பண்பாட்டு மயமாக்கலில் இந்திய இறையியலாளர் ஈடுபட்டனர். இந்திய ஆயர்கள் பலரும், கத்தோலிக்க பொதுநிலையினர் பலரும் இதை எதிர்த்தார்கள். பொதுநிலையினரிடையே போதிய விளக்கங்களைக் கொடுக்காது குருக்கள், துறவிகளிடையே பெரும்பாலும் இம்மாற்றங்கள் ஏற்பட்டமை எதிர்ப்புக்கு ஒரு காரணமாகலாம். இந்தியப் பண்பாட்டு மயமாக்கலை இன்று பார்க்கும் பொழுது குறைப் பிரசவம் போலத் தோன்றுகின்றது.

அதுமட்டுமன்றி, இந்திய மயமாக்கலுக்கும் இந்து மயமாக்கலுக்கு மிடையே ஒரு குழப்பம் தோன்றியது. பெரும்பான்மையினர் (கத்தோலிக்கர், ஆயர்கள், குருக்கள் உட்பட) இந்து மதமாக்கலாகவே இந்திய மயமாக்கலைப் பார்த்தார்கள். பல நூற்றாண்டுகளாக, மேல்நாட்டு முறைகளில், கலாசாரத்தில் ஊறிவிட்ட மக்களுக்கு இந்திய மயமாக்கல் தவறாகவேபட்டது. இந்தக் குழப்பமும், எதிர்ப்பும் வத்திக்கான் ஆட்சியாளர்களுக்குச் சாதகமாகியது. ஆகவே, பேசினில் (basin) குழந்தையைக் குளிப்பாட்டிய நீரை வெளியே எறிந்தபொழுது குழந்தையையும் எறிந்து விட்டார்கள். (இது, ஓர் ஆங்கிலப் பழமொழியின் தமிழாக்கம். Throw the baby with the bath water)

பல துறவற சபைகள் சொல்லளவில் வத்திக்கான் சங்கத்து மறுமலர்ச்சியை ஏற்றுக் கொண்டாலும், அதற்கேற்ப துறவறப் படிமத்தையோ, துறவற இறையியலையோ மாற்றத் தவறியதினால் ஏற்பட்ட மயக்கங்களும், குழப்பங்களும் இன்றுவரை நீடிக்கின்றன. போட்டிருந்த சபைகளுக்குரிய சட்டைகளை மாற்றிய வேகத்தில், அவசியம் மாற்றப்பட வேண்டிய துறவறப் படிமமும் (wordle of religious life) புதியதோர் துறவற ஆன்மீகத்தையும் தழுவாமையினால் பல குளறுபடிகள் சபைகள் தோறும் ஏற்பட்டன. இன்றுவரை ஏற்படுகின்றன.

சீர்திருத்தங்களை ஏற்க மறுப்போர் மேற்கூறிய விளைவுகளைச் சுட்டிக்காட்டி மீண்டும் இப் பிழைகள் நடக்கக்கூடாதென வாதிடுவதுண்டு. இவர்கள் காட்டிய பின்விளைவுகள் உண்மைதான். ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவைதான். ஆனால் அவ்வளவு பின்விளைவுகளுக்கும் இரண்டாம் வத்திக்கான் சங்கம்தான் காரணமென்பது குறுகிய சிந்தனை மட்டுமல்ல, பிரச்சினைகள் அனைத்துக்கும் சங்கத்தைப் பலிக்கடாவாக்கும் முயற்சியுமாகும். அதேவேளை, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினால் ஏற்பட்ட நன்மைகளை இவர்கள் எடுத்துக் கூறாமை இவர்களைக் காட்டிக் கொடுக்கின்ற(ன)து.

திருவழிபாட்டு மொழியை தங்கள் தங்கள் மொழிகளில் மாற்றி அமைக்க, சிந்தனைச் சுதந்திரம், பெண்களும் இறையியல் கற்றுக் கொள்ளவும், இறையியலைப் பெண்மை நோக்கி உருவாக்கவும், அதிகாரப் பகிர்தல், பிற மதங்களை மதித்து அவர்களுடன் உரையாட வழிவகுத்தமை, பன்மையில் ஒற்றுமை காணல், ஆயிரக் கணக்கான மக்களுக்கு ஓர் அக விடுதலை உணர்வை அளித்தமை போன்ற பல நன்மைகளை இரண்டாவது வத்திக்கான் சங்கம் கொண்டு வந்தது.

**எனது அனுபவம்**

நான் இறையியலை கற்ற பொழுது எனது மதிப்புக்குரிய பேராசிரியர்கள் அருட்பணி கிறிஸ்ரி யோக்கிம் பிள்ளை, அ.ம.தி. மைக்கேல் ரொட்றிக்கோ அ.ம.தி அவர்கள் மாற்றுச் சிந்தனைகளை அள்ளித் தந்தார்கள். நானும் மாற்றுச் சிந்தனையில் வளர ஆரம்பித்தேன். அந்தச் சிந்தனைகளை அன்றே அதாவது மாணவனாக இருந்த பொழுதே செயற்படுத்த வாய்ப்புத் தந்த அருட்பணி எல்.ஏ.சிங்கராயர் அ.ம.தி இவர்களை நன்றியோடு நினைத்துக் கொள்ளுகின்றேன். இரண்டாவது வத்திக்கான் சிந்தனையை சுடச்சுடத் தந்தவர்கள் நான் மேற்கூறிய அமலமரிக் குருக்கள் இவர்களிடம் ஓர் ஆளுமை இருந்தது. ஒரு தலைமைத்துவம் இருந்தது. ஓர் அக அதிகாரம் இருந்தது.

இன்று உளவள வழி நின்று ஓர் ஆன்மீகத் தேடலில் ஈடபடவும், மனித வாழ்வின் பல்வேறு கூறுகளை, நன்மைகளை ஓர் உளவள ஆன்மீக நோக்குடன் அதுவும் ஒரு வாழ்க்கையைப் (as a professional) பார்க்கவும் துணிந்தேன் என்று சொன்னால், அந்தத் துணிவைத் தந்தது இரண்டாவது வத்திக்கான் சங்கம். உளவள ஆன்மீகம் என்னுள், என்னில் இரண்டறக் கலந்து விட்டமையினாலும் அந்தத் துணிவு வந்தது. ஓர் அக அதிகாரத்தோடு பேசுவதற்கு அந்தத் துணிவு வந்தது.

இந்த உளவள ஆன்மீகத்தை என்னுள் வளர்த்து வந்தபொழுது, பிற மதங்களில் சிறப்பாக இந்துமத, பௌத்த மத ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டேன். அந்த ஈடுபாட்டில் பிறந்தது தான் எனது இன்றைய இலட்சியம் "பிரபஞ்ச ஆன்மீகம்".

ஆயினும் இரண்டாவது வத்திக்கான் சங்கத்துச் சிந்தனைகள் அவ்வளவும் (ஏடுகள்) முழுமையாக இன்றுவரை நடைமுறைப்படுத்தாமை வருத்தத்திற் குரியது. இயேசு சபையைச் சேர்ந்த எங்கள் நாட்டு இறை இயலாளர் அருட்பணி அலோசியஸ் பீரிஸ் அவர்கள் தனது கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து, ஒரு நூல் வெளியிட்டார். அந்த நூலின் பெயர், "இரண்டாவது வத்திக்கான் சங்கத்திற்கு ஒரு வாய்ப்பளியுங்கள்"

(வளரும்....)

## வெறுமையாக்கி நிறைவாதல்

**"ஒன்றுமில்லாமையை
அன்பு செய்யுங்கள்,
சுயத்திலிருந்து விடுபடுங்கள்,
தனித்து நில்லுங்கள்,
எவரிலும் தங்கியிராதீர்கள்,
அமைதியாய் இருங்கள்,
எல்லாக் கட்டுக்களிலிருந்தும்
விடுதலையாகுங்கள்,
கட்டுப்பட்டோரை விடுவியுங்கள்,
துன்பநீரைப் பருகும்பொழுது
அன்புச் சுவாலையால்
பற்றி எரிவீர்கள்,
பாலைவனத்தில் வாழும் முறை
இதுவே" என்று வழிகாட்டுகிறார்
மக்டேபேர்க்கின் மீசைல்ட்.**

பாலைவனத்து அனுபவம் வெறுமையிலிருந்து நிறைவடைதலையே சுட்டுகின்றது. வாழ்வியற் கலையில் நீந்துவதற்கு வெறுமையாக்கல் துணை புரிகின்றது. பாலை நிலத்தில் பயணிக்க முன்வருதல் எம்மைச் சில கணங்கள் விட்டுவிட்டு, சமாதி நிலையில் சஞ்சலமின்றி இருப்பதாகும். பாலைநிலத்தில் எம் எண்ணங்களைப் பசுமையாக்கி, அகவிடுதலையை நோக்கி நகருகிறோம். ஒன்றுமில்லாமையில் இருந்து பிறந்த நாம் மீண்டும் கருவாகி உருவான இடத்திற்கே திரும்புகிறோம். உள்ளன்போடு ஒன்றும் இல்லாமையை நேசிக்க ஆரம்பிக்கிறோம்.

"எல்லாவற்றிலும் திருப்தி அடைய ஒன்றுமில்லாமையில் ஆசைப்படுங்கள். எல்லாவற்றையும் பெறுவதற்கு ஒன்றுமில்லாமையைப் பெற ஆசைப்படுங்கள். எல்லாமாக இருப்பதை வந்தடைவதற்கு ஒன்றுமில்லாமலிருக்க ஆசைப்படுங்கள். எல்லாவற்றினதும் அறிவை வந்தடைய ஒன்றுமில்லாமையின் அறிவின்மீது ஆசைகொள்ளுங்கள்" என்று சிலுவை யோவான் தூண்டுகிறார்.

"உண்மைச் சமுத்திரத்தின் அடியில் நீந்தவேண்டும் என்றால் நீங்கள் பூச்சிய நிலைக்கு உங்களைத் தாழ்த்துங்கள்" என்று மகாத்மா காந்தி மொழிகிறார். ஒருவர் தன்னை வெறுமையாக்கக் கற்றுக் கொள்ளும்பொழுது ஒன்றுமில்லாமையை எதிர்கொள்கின்றார். ஒன்றுமில்லாமையின் அனுபவங்கள் அதிர்ச்சிமிக்கவையாகவும் ஆழமானவையாகவும் உள்ளன.

வாழ்வின் இரகசியம் தன்னலமற்ற பணியேயாகும். பற்றற்ற நிலையில் வாழுதலே எமது உயர் இலட்சியமாகும். துன்பத்தில் இன்பம் காணுதல் இயற்கையோடு, இறைவனோடு இணைந்து வாழுதலின் பயனாகும்.

அருட்பணி டேவிற் வின்சன் பற்றிக், அ.ம.தி.

# 16வது ஆயர் மாமன்றம்



**ஆயர் மாமன்றத் தலைமைச் செயலகத்தின் தலைமைச் செயலர் மரியோ கர்தினால் கிரேச் அவர்கள் ஆயர்களுக்கான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இறைவேண்டலின் பல்வேறு படிநிலைகளைத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகின்றார்.**

**தமிழாக்கம் :**
**அருள்முனைவர் பிரான்சிஸ் ஜோசப்**
**தமிழ்நாடு ஆயர் பேரவையின் துணைச் செயலர்**

**ஆயர் குழாமில் என் சகோதரர்களே!**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒக்டோபர் 06. 2021 முழுத் திருஅவையையும் கூட்டொருங்கியக்கத்திற்கு அழைத்த சமயத்திலிருந்து ‘கடவுள் பிள்ளைகள் பயணிக்கும் நிலையிலேயே உள்ளனர்’ (செயற் பாட்டு ஏடு, (Instrumentum Laboris) எண்.1) இப் போதோ கடவுளின் பிள்ளை களைக் கலந்தாய்வு செய்யத் தொடக்கத்திலிருந்து, கூட்டொருங்கியக்கத்தின் நீட்சியில் மற்றொரு மைல் கல்லை அடைந்திருக்கின்றோம். இன்னும் சற்று நாட்களுக்குள் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதியன்று 16-வது ஆயர் மாமன்ற சாதாரண பொதுக்கூட்டத்தின் முதல் அமர்வை ‘ஒருமைப்பாடும், பங்கேற்பும், மறைத்தூதும் உள்ளடங்கிய கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக’ ஆரம்பித்து வைக்க இருக்கின்றார்.

‘இறைவேண்டல் இல்லாமல் ஆயர் மாமன்றமில்லை’ **(அக்டோபர் மாதத்தின் திருத்தந்தையின் பொதுக்கருத்து).** எல்லாவற்றிற்கும் மேலாக ஆயர் மாமன்றம் என்பது, இறை வேண்டலின் நிகழ்வு மற்றும் ஆயர் மாமன்ற உறுப்பினர்களை மட்டுமல்ல, திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு வரையும் எல்லாத் தலத் திருஅவையும் செவிமடுத்தலில் ஈடுபட அழைத்துச் செல்வதாகும். உண்மை யாகவே நாம் அனைவரும் இறைவேண்டலின் ஒருமைப்பாட்டில் இணைந்திருக்கவும், ஆண்டவர் தமது திருஅவையிடம் இன்று எதைக் கேட்கிறார் என்பதை அறிந்து கொள்வதற்குத் தூய ஆவியின் வழிநடத்தலுக்காகத் தொடர்ச்சியாகக் குரலெழுப்பவும், இத்தருணத்தில் அழைக்கப்படுகின்றோம். ஆகவே, உங்கள் தலத்திருஅவையில் ‘கண்களால் பார்க்கக்கூடிய ஒற்றுமையின் முதன்மையும் அடித் தளமுமான ‘ **(வத்திக்கான் சங்க ஏடுகள், திருச் சபை எண்:23)** மற்றும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட பிள்ளைகளுக்கு இறைவேண்டலின் முதல் வழிகாட்டியுமான உங்களுக்கு நான் எழுதுவதன் காரணமாக நமது திருத்தந்தை பிரான்சிஸ் பாப்பிறைக்காகவும், ஆயர் மாமன்ற அனைத்து உறுப்பினர்களுக்காகவும் முழுத் திருஅவையிலிருந்தும் ‘இடைவிடாதோர் இறைவேண்டல்’ (தி.து.பா.12:5) இறைவனை நோக்கி மேலெழுந்து செல்லட்டும். எனவே, நீங்கள் ஆயர் மாமன்றத்திற்காக இறைவேண்டல் செய்யுங்கள் என்று கேட்டு, உங்கள் தலத்திருஅவையின் ஒவ்வொரு கிறிஸ்தவக் குழுமமும் குறிப்பாக, துறவுக் குழுமங்களும் ஒரே மனத்தோடு இடைவிடாது ஆயர் மாமன்றத்திற்காக வேண்டவும் அவர்களை வலியுறுத்த உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இறைவேண்டல் ஆயர் குழாமின் செய்கைக்கு ஒவ்வோர் ஆயரும் சிறப்பான விதத்தில் காட்டும் பங்களிப்பின் ஒரு முறையாகும். அதுவே, அகில உலகத் திருஅவைக்குச் சிறப்புக் கவனத்தின் சிறந்ததோர் அடையாளமாகவும் உள்ளது (காண்: திருத்தூதர்களின் வழித்தோன்றல்கள், எண்.13)

## இறைவேண்டலின் பல்வேறு படிநிலைகள்

இறைவேண்டலின் பல்வேறு வகைகள் கூட் டொருங்கியக்கத் திருஅவை வாழ்க்கையின் பல பரிமாணங்களை வெளிப்படுத்தும் ஒன்றே ஆகும். எல்லாவற்றிற்கும் முதலாக இறைவேண்டல் என்பது செவிமடுத்தல். கூட்டொருங்கியக்கத்தின் பயணத்தைத் துவங்குகையில் திருத்தந்தை அவர்கள் “இந்த ஆயர் மாமன்றம் மேலும் வழக்கமான நிகழ்வுகளிலிருந்து நம்மை விடுவித்துக்கொண்டு மேய்ப்புப்பணிக் காரியங்களைக் கொஞ்சம் தள்ளி வைத்து, நின்று செவிமடுக்கக்கூடிய நல்லதொரு வாய்ப்பினை நல்கி, செவிமடுக்கும் திருஅவையாக நம்மை மாற்றுகிறது” என்று கூறினார் (சிந்திக்கும் தருணம், உரோமை அக்டோபர் 9,2021).

இறைவார்த்தைக்குச் செவிமடுத்தல், ஆவியின் குரலுக்குச் செவிமடுத்தல் இறைவேண்டலின் முதல் படி. ஆகவே, விரிவான ஆயர் மாமன்றச் சபைக்கு ஒவ்வொரு திருமுழுக்குப் பெற்றவரின் பங்களிப்பு என்பது இறைவார்த்தைக்குச் செவிமடுத்தல் மற்றும் ஆவியின் குரல் இல்லாமல் திருஅவையில் பகுத்தாய்வு என்பது இல்லை என்ற நிலைப்பாட்டில் ஆவியானவருக்குச் செவிமடுப்பதே ஆகும்.

இறைவேண்டலின் இரண்டாம் படிநிலை ஆராதனை. திருத்தந்தை கூறுகிறார்: “இன்று ஆராதனையின் இறைவேண்டலை எவ்வளவு தூரம் நாம் இழந்திருக்கின்றோம்! நிறைய மக்கள் அந்தப் பழக்கத்தை மட்டும் இழந்துவிடவில்லை அதோடு கடவுளை ஆராதிப்பது என்பது என்ன என்ற அடிப்படை நோக்கத்தையும் இழந்திருக்கின்றனர்” (உரோமை அக். 9, 2021). செவிமடுத்தல் நம்மை அமைதியில் ஆராதனைக்கு அழைத்துச் சென்று, கடவுள் தம் திருஅவைக்கு என்ன சொல்கிறார் என்பதையும், இன்று ஆவியானவர் திருச் சபையில் எதைத் தூண்டியெழுப்புகிறார் என்ற ஆச்சரியத்திற்குள்ளும் திளைக்க வைக்கும். இதுவரை பயணித்து கூட்டொருங்கியக்கப் பாதை, துவண்டு போன கலக்கத்திலிருந்து அல்லது இழப்பின் சோகத்திலிருந்து (காண். லூக் 24:17) நம்மைப் பார்வை மாற்றத்திற்கு அழைத்து, தங்கள் மத்தியில் ஆண்டவரின் பிரசன்னத்தைக் கண்டு கொண்ட அனைவரின் மகிழ்வான மறைப்பணிக்கு (காண். லூக் 24:32) நம்மை அழைத்து வந்து அதிசயமும், ஆச்சரியமும் பட வைத்திருக்கிறது.

இறைவேண்டலின் மூன்றாம் நிலை பரிந்துரை. நாம் இந்தப் பரிந்துரை இறைவேண்டலின் ஆற்றலில் நம்பிக்கைக் கொள்ள வேண்டும். இது கடவுளின் திருவுளத்தை நமக்கு ஏற்ப வளைப்பது அல்ல. மாறாக, பரிந்துரை செய்வது என்பது உயிரளிக்கும் ஆவியின் ஆற்றலால் நமது இதயங்களை ஒளிர்விக்கச் செய்ய ஆண்டவரைக் கேட்டு, அதன் காரணமாக அவரின் திருவுளத்தைக் கண்டுணர்வதும், நிறைவேற்றுவதும் ஆகும். பரிந்துரை செய்வது என்பது நமது பங்களிப்பையும், ஈடுபாட்டையும் கடவுள் முன் அறிக்கையிட்டு, பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகும். பரிந்துரை செய்வது என்பது ‘நான் ஆர்வமாய் உள்ளேன்”, ‘நான் உள்ளே இருக்கிறேன்”. ‘இது எனக்குச் சொந்தம்’, என்று சொல்வதாகும். ஆயர் மாமன்றத்திற்காகப் பரிந்துரை என்பது, அதன் அனைத்து உறுப்பினர்களுக்காகவும் குறிப்பாக, எல்லாவற்றிற்கும் முதலாவதாக அடிக்கடி தனக்காக இறைவேண்டல் செய்ய அழைக்கும் திருத்தந்தைக்காக இறைவேண்டல் செய்வது நமது உச்சக் கட்டப் பங்களிப்பில் நம்மை ஈடுபடுத்தும்.

இறுதியாக, அன்புச் சகோதரர்களே, செபம் என்பது நன்றி கூறல், இது கடவுளின் முதன்மைச் செயற்பாட்டை மற்றும் அருளைக் கிறிஸ்தவக் குழுமத்தின் வாழ்விலும், நம் அனைத்துச் செயல்களிலும் உணர்வதேயாகும். திருத்தந்தை கூறுவது: “நன்றிகூறும் இறைவேண்டல் என்பது, இறையருள் நமக்கு முன்பாகச் செல்கிறது என்பதை உணர்வதில் ஆரம்பமாகிறது. நாம் சிந்திக்கக் கற்றுக்கொள்ளும் முன்பே நாம் அவரால் சிந்திக்கப்பட்டோம். எப்படி அன்பு காட்ட வேண்டும் என்று கற்றுக்கொள்வதற்கு முன்பு, நாம் அவரால் அன்பு செய்யப்பட்டோம். நமது இதயங்களில் ஆர்வத்தை உருவாக்கும் முன்னரே, அவரால் ஆர்வம் காட்டப்பட்டோம்” (பொதுச் சந்திப்பு உரை, டிசம்பர் 30, 2020).

நன்றிகூறும் இறைவேண்டல் உண்மையான நலம் தரும் காரணியாகச் செயற்பட்டு, சுருக்கிக் கொள்ளும் நிலையிலிருந்து வெளிப்படைத் தன்மை நிலைக்கு நம்மைக் கடத்தி, கடவுள் திருஅவையில் தொடர்ந்து செயலாற்றுவதைக் கண்டு கொள்ளச் செய்வதாகும். அன்புச் சகோதரர்களே. செவிமடுத்தல், ஆராதனை, பரிந்துரை, நன்றிகூறல், இறைவேண்டலோடு முழு திருஅவைச் சமூகம் தூய ஆவியின் ஆற்றலோடு திருமுழுக்குப் பெற்ற அனைவரையும் சார்ந்த நிகழ்வாக ஆயர் மாமன்றச் சபையில் ஒன்றித்திருக்கும். ஆயர் மாமன்றச் சபைக் காகக் குறிப்பாக, அக்டோபர் 1 ஆம் திகதி பொதுக் காலம் 26 ஆம் ஞாயிறன்று இறைவேண்டலுக்கு அழுத்தம் கொடுக்க உங்களை அழைக்கின்றேன். குறிப்பாக, மறையுரையிலும், பொது மன்றாட்டுகளிலும், திருப்பலி முடிவில் தரப்படுகின்ற சிறப்பு ஆசீரிலும் நினைவுகூர உங்களை அழைக்கின்றோம். கூட்டொருங்கியக்கப் பயணத்தில் உங்கள் தலத் திருஅவைகளை வழிநடத்தும் உங்களின் சிறப்புக் கவனத்திற்கு நன்றிகூறும் வகையில், ஒற்றுமையின் கொடைகள் மற்றும் மகிழ்வின் எதிர்நோக்கு வழியாகத் திருஅவையின் பயணத்தில் நம்மை வளம் சேர்க்கும் ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன்.

முழுத் திருஅவையின் சார்பாக உங்கள் பணிக்கும், உங்களுக்கும் இறைவேண்டலை உரித்தாக்கிக் கொள்கின்றேன். ஆண்டவரின் ஆவி நம்மை ஒளிர்வித்து, இறைத்திருவுளத்தின் பாதையில் எப்போதும் நம்மை அழைத்துச் செல்வாராக! ஏனெனில் அவரது வார்த்தை ஒன்றே நம்மை வாழ்விக்கும் (காண். திபா 119:50). அதிலேதான் நாம் நம் மகிழ்ச்சியைக் கண்டுகொள்கிறோம்.



## சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் ஒக்டோபர் - 15

உலகிலே உயிர் பெற்ற அனைத்து ஜீவராசிகளின் தேவைகளும் துலக்கம் பெற்று ஈடேறி வருவதை நாம் கண்னூடாகக் காண்கின்றோம். அதேவேளை கண் பார்வையற்ற விழிப்புலனற்ற மானிடர்பால் எமது கவனம் ஈர்க்கப்பட வேண்டிய நல்லதோர் வாய்ப்பினை உலகுக்கு துலாம்பரமாக வெளிச்சமிட்டுக் காட்டுவதே இவ்வெள்ளைப் பிரம்பு தினமாகும்.

உலகில் 1961 முதல் வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 15 ஆம் திகதி விழிப்புலனற்றோருக்கான வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பரம்பரையாக பிறப்பு வழி, விபத்துக்கள், நோய்கள், போர்கள் போன்ற பல காரணிகளால் பலர் விழிப்புலன் இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். நடைபெற்று முடிந்தகோர யுத்தத்தில் எமது தாயகப் பிரதேசத்தில் பச்சிளம் குழந்தைகள் தொடக்கம் பல முதியோர்கள் வரை விழிப்புலன் இழந்து வாழ்ந்து வருகின்றனர். இத்தகையோருக்கு விழியாக வெள்ளைப்பிரம்பு காணப்பட்டாலும் அவர்களுக்கு விழியாக வாழ வேண்டியது நம் ஒவ்வொருவரதும் தார்மீகப் பொறுப்பாகும். இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பதும் அதுதான்.

எமது தாயகப் பிரதேசத்தில் சுன்னாகம் வாழ்வகம், கைதடி நவீல் பாடசாலை, புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம் போன்றவற்றில் விழிப்புலன் இழந்த மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்று வருவதுடன், இவர்களில் பலர் பல்கலைக்கழகமும் செல்கின்ற னர். மேலும் மாவட்டம், மாகாணம், தேசியம் என நடைபெறுகின்ற பல போட்டிகளில் இவர்கள் பங்குபற்றி விருதுகளையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கு நாம் விழியாவோம், வழியாவோம்.




சகோ.அ.ஸ்டீபன்

கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக: ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்திப்பணி' என்ற கருப் பொருளை மையமாகக் கொண்டு பதினாறாவது அகில உலக ஆயர்கள் மாமன்றப் பொதுப் பேரவை இவ் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகியுள்ள நிலையில் கூட்டொருங்கியக்கத் திருஅவை என்ற கருத்தாக்கத்தையும் கூட்டொருங்கியக்கத் தலைமைத்துவம் பற்றியும் இக் கட்டுரையில் பாதுகாவலன் வாசக நேயர்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானதாக அமையும்.

'கூட்டொருங்கியக்கத் திருஅவை' என்ற கருத்தாக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல், அதிலிருந்து பிறப்பெடுக்கும் கூட்டியக் கத் தலைமைத்துவம் என்ற செயற்பாட்டைப் புரிந்து கொள்வது கடினம். "கூட்டியக்கப் பயணமே இம்மூன்றாம் ஆயிரமாண்டில் வாழும் நம்மிடம் கடவுள் எதிர் பார்ப்பது" என்று உலக ஆயர்கள் மாமன்றம் உருவாக்கப்பட்ட 50வது ஆண்டு நிறைவு விழாச் செய்தியில் அறைகூவல் விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ், "இறையாட்சிக் கனவை நோக்கி கிறிஸ்துவின் வழியிலும், தூய ஆவியாரின் ஒன்றிப்பிலும் இணைந்து பயணிக்கும் இறைமக்கள் சமூகமே கூட்டியக்கத் திரு அவை" என்று குறிப்பிடுகின்றார். இது வரையறை அல்ல. மாறாக, திரு அவையைப் பற்றிய ஒரு விவரிப்பு. திரு அவையை ஒருபோதும் வரையறுத்து விட முடியாது. காரணம், அது வரலாற்றில் நிறுவப்பட்ட ஒன்றாக இருந்தாலும், இறைவனால் உருவாக்கப்பட்ட ஒரு மறை பொருள். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திரு அவை பற்றிய இப்புதிய பார்வை இறை மக்களிடையே போதிப்பவர் - போதிக்கப்படுபவர், புனிதப்படுத்துபவர் - புனிதமடைபவர், வழிநடத்துபவர் -வழிநடத்தப்படுபவர் என்ற பிரிவினையை உடைத்து, 'இணைந்து பயணித்தல்' என்ற புதிய நடை முறையை நம்முள் உருவாக்குகின்றது. இணைந்து பயணித்தல் என்பது, இணைந்து செவிமடுத்தலை அடிப்படையாகக் கொண்டது.

கூட்டொருங்கியக்கத் திரு அவை என்பது, திரு அவையை மக்களாட்சித் தத்துவத்தில் இயங்கும் நிறுவனமாக மாற்றுவதற்கான முயற்சி அல்ல. மாறாக, தூய ஆவியாருக்குச் செவிமடுக்கும் முயற்சி. மக்களாட்சித் தத்துவத்தில் பெரும்பான்மையின் குரலுக்குச் செவிமெடுக்க முடியுமேயன்றி, தூயஆவியாரின் குரலுக்குச் செவிமடுக்க முடியாது. கூட்டொருங்கியக்கத் அவையானது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் என ஒருசிலர் வாயிலாகவே தூய ஆவியார் பேசுவார் என்ற பார்வையை மாற்றி, இறைமக்கள் அனைவர் வாயிலாகவும் பேசுவார் எனவே, அனைவரும் செவிமடுக்கப்பட வேண்டும் என்ற புதிய பார்வையை நமக்குத் தருகின்றது.


இப்புரிதல் நம்பிக்கை, அறநெறி ஆகியவை பற்றி அனைவரும் தம் பொதுக்கருத்தைக் காட்டும் சூழலில் இயல்பு கடந்த நம்பிக்கை உணர்வினால் (sensus fidei) வெளிப்படுத்தப்படும் உண்மைகள், நம்பிக்கையில் தவற முடியாதவை எனக் கூறும் இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனையை அடிப்படையாகக் கொண்டது. தூய ஆவியாரின் குரலுக்குத் திறந்த மனம் உடையவர்களாவும், 'நான் என்ன சொல்கின்றேன்?', 'நீ என்ன சொல்கின்றாய்?', இறுதியாக 'நாம் என்ன சொல்கின்றோம்?' என்ற மூன்று நிலைகளில் உரையாடல்கள் நிகழ்த்துபவர்களாகவும் நாம் மாறும்பொழுது, இவ்விணைந்த செவிமடுத்தலில் பங்கேற்பவர்களாகின்றோம். திருமுழுக்கின் வழியாக அருள்பொழிவு செய்யப்பட்ட அனைவருமே கிறிஸ்துவின் போதிக்கும், புனிதப்படுத்தும், வழிநடத்தும் பணிகளில் பங்கேற்கின்றார்கள். ஒவ்வொருவரும் அவரவர் பெற்றுக் கொண்ட அருங்கொடைகளின் அடிப்படையில் பணிபுரிய அழைக்கப்படுகின்றார்கள். ஒரே தூய ஆவியாரே, பல்வேறு பணிகளுக்காக, பல்வேறு கொடைகளைப் பலருக்கும் பகிர்ந்து அளிக்கின்றார். எனவே, ஒவ்வொரு பணியும் தனித்தன்மை வாய்ந்ததேயன்றி, ஒன்றிலிருந்து மற்றொன்று உயர்ந்ததென்றோ, தாழ்ந்ததென்றோ நம்மால் கூறமுடியாது. இணைந்து பயணித்தலில் முந்திச் செல்வதற்கோ, பின்தங்கி நிற்பதற்கோ இடமில்லை. இப்பார்வை கூட்டொருங்கியக்கத் திரு அவையில் தலைமைத்துவத்திற்கு இடம் உண்டா? என்ற கேள்வியை நம்முள் எழுப்பலாம். கூட்டொருங்கியக்கத் தலைமைத்துவத்தைப் பற்றிய சரியான பார்வை இக்கேள்விக்குப் பதிலளிப்பதாக அமைகின்றது.

கூட்டொருங்கியக்கத் தலைமைத்துவம் "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால், அவர் அனைவரிலும் கடைசியானவராகவும், அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்" (மாற் 9:35) என்ற இயேசுவின் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டது. இயேசு திருத்தூதர்களைத் தலைமையாகக் கொண்டு திரு அவையை நிறுவினார். திருத்தூதர் பேதுருவைத் தனது சகோதரர்களை (பிற திருத்தூதர்களை) நம்பிக்கையில் உறுதிப்படுத்துபவராக்கினார். எனவே, திருத்தந்தையின் பார்வையில், கூட்டொருங்கியக்கத் திரு அவையில் படிநிலை அமைப்பு முற்றிலும் தவிர்க்கப்படுதில்லை. மாறாக, படிநிலைக் கோபுரமானது தலைகீழ் கோபுரமாக மாற்றப்படுகிறது. உச்சத்தில் இருப்பவர்கள் தங்களுக்குக் கீழ் இருப்பவர்களுக்குப் பணிவிடை செய்பவர்களாக மாறுகிறார்கள். இங்கு அதிகாரம் பணியாகப் பார்க்கப்படு கின்றது. ஆயர்களின் பணி மக்களின் குரலாக ஒலிப்பதும், உரோமை ஆயரின் பணி அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பதுமாக அமைகின்றது.

திருமுழுக்கின் வழியாக தூய ஆவியாரின் அருட்பொழிவு பெற்ற இறைமக்கள் ஒவ்வொருவருக்குமே கடவுளோடும், பிறரோடும் தோழமையில் இணைந்திருப்பதற்கும், இணைந்து பங்கேற்பதற்கும், இணைந்து பணிபுரிவதற்கும் அருங்கொடை அதிகாரமானது (Charismatic Authorityவழங்கப்பட்டுள்ளது. குருத்துவ அருட்பொழிவின் வழியாகப் பெறப்படும் அதிகாரமானது, மக்களிடம் காணப்படும் பல்வேறு அருட்கொடைகளை அடையாளம் கண்டு, அவர்களை ஒருங்கிணைத்துப் பயணிப்பதற்கான பணி சார்ந்த அதிகாரமே.நல்ல சமாரியன் உவமையில் (லூக் 10: 25-37) இடம்பெறும் சமாரியரின் செயற்பாடுகளைக் கூட்டியக்கத் தலைமைக்கான சிறந்த உருவகமாக நம்மால் பார்க்க முடியும். நிறுத்துதல் (லூக் 10:33), பரிவு கொள்ளுதல் (லூக் 10: 33), செயலாற்றுதல் (லூக் 10:34), ஆற்றுப்படுத்துதல் (லூக் 10: 34), கூட்டுறவு (லூக் 10:35), ஒருங்கிணைத்தல் (லூக் 10: 35) என்ற ஆறு பணிகளை அவர் ஆற்றுவதை நற்செய்தியில் நாம் காண்கின்றோம். இவை அனைத்தும் நாம் இறைவனுடனான உறவிலும், பிறருடனான உறவிலும் நிலைத்திருக்கும் பொழுதே சாத்தியம். இறையாட்சியே இலக்கென இணைந்து பயணிப்போம். கூட்டியக்கத் திரு அவையில் தலைவர்கள் அதன் பணியாளர்களே. ●

---

# அவனுக்கு முதுகெல்லாம் கூசியது



அருட்பணி எஸ்.அஜந்தன்

'அண்ண அது கசிப்புக் கந்தன் தானே" யாரைச் சொல்கிறாய்? 'அங்க பாரண்ண, ஆலமரத்தடி வேரில குந்திக் கொண்டு இருக்கிற ஆள்...

'ஓ... அந்தச் சிவத்தச் சேட்டோ' 'ஓ... அவன்தான். அது ஒரு வெறி பிடிச்ச பே. குடிகாரன். கத்தியில்லாம இவனைக் காணவே ஏலாது. இவனக் கண்டா ஊரே நடுங்கும். இவன் இங்க என்ன செய்யுறான்?'

'நீ சொல்லுறது உண்மைதான்... எனக்கும் தெரியும். ஆனால் ஏன் இப்ப இந்த ரியூசனுக்கு முன்னால் இந்த மனுசன் வந்து இருக்குதெண்டு தெரியுமே

கந்தண்ணனின்ர மகள் 'நிலா' போன வருசம் தான் பெரிசாகினது. பெயர் போலவே நிலவின் குணம் அவளுக்கு.

நிலா பெரியபிள்ளை ஆன பிறகும் கந்தன் குடியும் வெறியும் எண்டுதான் திரிஞ்சவன்.

போன வருசம் மாசி மாதம் ஒரு திங்கட்கிழமை. பிள்ளையள் பள்ளிக் கூடம் முடிஞ்சு வாற நேரம் கந்தன் சைக்கிள்ள நல்ல வெளியில வந்து நடுறோட்டில விழுந்து போனான். அதிலே கிடந்து சத்தி எடுத்து, சாற மெல்லாம் அவிண்டு தூஷணங்களால கத்திக்கொண்டு கிடக்கிறான். பிள்ளைகளோடு பள்ளிக்கூடம் விட்டு வந்த நிலா அதைப் பார்த்து விளைத்துப் போனாள்.

அத்தனை பளள்ளிக்கூடப் பிள்ளைகளும் சூழ்ந்து நின்று சிரித்தபடி வேடிக்கை பார்க்கின்றார்கள். நிலா வுக்கு உள்ளங்காலிலிருந்து உச்சம் தலை வரை கூச்சம் படருகிறது. அவமானத்தால் கூனிக் குறுகுகிறாள்.

கந்தனின் தலையால் இரத்தம் வடிவது தெரிகிறது. ஓடிச் சென்று கந்தனின் தலையைத் தூக்கி மடியில் வைக்கிறாள். நிமிர்ந்து பார்க்க முடியாமல் தலை குனிந்த படி தன் கைக்குட்டையால் கந்தனின் இரத்தம் துடைக்கிறாள்.

மாணவர்கள் சுற்றி நின்ற கூட்டத்தில் சத்தம் சலசலப்பு நிலாவின்ர அப்பா.. கசிப்புக்

கந்தன். அங்கே எழுந்த சிரிப்புச் சத்தங்களில் அவளுக்கு முதுகெல்லாம் கூசியது.

கொஞ்ச நேரத்தில், தெரிந்தவர்களின் ஆட்டோவில் கந்தனைத் தூக்கிச் சென்று விட்டார்கள்.

அடுத்தநாள் காலை நடந்தது முழுவதும் கந்தனுக்குத் தெரிந்து விடுகி றது. அவனுக்கு மகள் என்றால் உயிர். மகளுக்கு எந்தக் குறையுமே வைத்தது கிடையாது. மகளின்ர சிரித்த முகம் பார்த்த பிறகுதான் வேலைக்கு கிளம்புவான்.

மிகுந்த மனப்பாரத்தோடு நிலாவின் அறைக்கதவருகெ வருகிறான். 'நிலாம்மா... நிலாம்மா...என்று கூப்பிடுகிறான்.

கதவு திறக்கிறது... உள்ளே நிலா வேரோடு பிடுங்கி வெயிலில் போட்ட றோசாச் செடிபோல வாடிக் கிடந்தாள். கன்னங்கள் வழியே கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அப்பாவை அவள் நிமிர்ந்து பார்க்கவேயில்லை.

கந்தன் தனக்குள்ளே ஏதோ ஒன்று உடைந்து நொருங்குவதை உணர்ந்தான்.

கட்டிலில் இருந்த நிலாவின் முன் முழந்தாள் படியிட்டான். அவளின் முகத்தை நிமிர்ந்த பார்க்கமுடியவில்லை.

நிலாவின் கைகளைப் பிடித்தான் .அழுகை வந்தது. அவளின் உள்ளங்கைகளுக்குள் முகம் புதைத்து அழுதான். விம்மி விம்மி அழுதான். போதுமானமட்டும் அழுதான்.

இனிமேல் ஒரு நாளும் குடிக்கமாட்டன் தாயே. அப்பாவை மன்னிச்சுக் கொள்ளம்மா..

இப்போது அவள் நிமிர்ந்து தந்தையின் முகம் பார்த்தாள். ஒரு குழந்தையின் முகத்தைப் போல இருந்தது.

தந்தையின் தலை தடவினாள். 'சரி.. விடுப்பா' என்றாள். நிலாம்மா அப்பாவ மன்னிச்சிற்றியா? என்று கன்னங்கள் வழியே வழியும் கண்ணீரைத் துடைக்காமலே கேட்டாள்.

அவருக்கே அப்பாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது அன்டைக்கு விட்ட குடிதான். இதுவரை ஒரு துளிகூட அவன் வாயில் பட்டது இல்லை. அண்டைக்கு அந்த சந்திக் கடையில நிண்டு யாருக்கோ சொல்லிக் கொண்டிருந்தவர்.

( தொடர்ச்சி 07ம் பக்.)



# செபமாலையின் வீரர்கள்

## ஒரு ஆன்மீக ஆயுதத்தின் வரலாறும் அதன் வீரர்களும்

**06**

**Champions of the Rosary - The History and Heroes of a Spritual Weapon**
**by Donald H. Calloway MIC (Marian Fathers of the Immaculate Conception)**
**(–தமிழில் – அருட்பணி.எஸ்.வி.ப். மங்களராஜா) டொனால்ட் எச். கலோவே**
MIC (Marian Fathers of the Immaculate Conception)
அமல உற்பவ மரியாளின் குருக்கள் துறவறசபை

**'செபமாலை' எனும் பெயர்**
(தொடர்ச்சி)

அத்துடன் அவர் ஒருபோதும் தமது ஆழ்தியான இறை அனுபவங்கள் பற்றிப் பெருமை பாராட்டாமலும் இருந்ததால் ஆரம்பகாலத்தில் செபமாலை ஒருவிதத்தில் ஒரு மறை பொருளாகவேயிருந்தது. இதனை வைத்துக்கொண்டு இவரது வாழ்நாளில் இந்த இவரது செபமுறை செபமாலை என்று அழைக்கப்படவில்லையென்று பொருளாகாது. எனினும் 'மரியாளின் திருப்புகழ் மாலை' யாக விருந்த இச்செபமுறை முழு உலகிலும் 'செபமாலை' என்று எல்லோருக்கும் தெரிந்து ஏற்றுக் கொள்ளப்பட நூற்றாண்டுகள் சில செல்லவேண்டியிருந்தது. வரலாற்று ரீதியில் பார்க்கப்போனால் 'செபமாலை' எனும் சொல் புனித சாமிநாதர் காலத்துக்குமுன்பே பாவனையிலிருந்து 13 ஆம் நூற்றாண்டுக்கு முன் றோசாறியும் **(Rosarium)** எனும் வார்த்தையானது றோசா மலர்த் தோட்டம் அல்லது றோசா மலர்களை ஒரு அழகிய தொகுப்பாக வைக்கப் பட்ட பூச்செண்டை அல்லது மலர் வளையத்தைக் குறிப்பதாக இருந்தது. எனினும் புனித சாமிநாதரின் வாழ் நாளில்தான் இவ்வார்த்தை மரியாளின் திருப்புகழ் மாலையுடன் தொடர்புபடுத்தப்பட்டது. அத்துடன் 13ம் நூற்றாண்டிலேதான் மரியாளின் பெயரில் திருஅவையில் 'மே' மாத பக்திமுயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டன. புனித சாமிநாதர் ஒரு ஸ்பானிய நாட்டவரானதாலும், மரியாளின் பெயரில் அனைத்துலகிலும் மிகப்பிரபல்யமான போதகராக ஏற்றுக்கொள்ளப்பட்டவராகவிருந்ததாலும் அப்போது ஸ்பானிய அரசராகவிருந்த 10ம் அல்போன்சோ அவருக்கு மரியாதை செலுத்துமுகமாக அவரை பின்பற்றி றோசாப் பூக்கள் மலரும் காலமாகிய மே மாதத்தில் மரியாளின் திருவுருவங்களுக்கு முடி சூட்டி வந்தார்.

புனித சாமிநாதரின் மரியாளின் திருப் புகழ் மாலையை செபமாலையென்று வர்ணிப்பதற்கான ஆதாரம் 13ம் நூற் றாண்டில் வெளிவந்த அட்பொண்ட் நகர மடாதிபர் எங்கெல்பேட் என்பவரது 'பரிசுத்த கன்னிமரியாளின் திருப்புகழ்மாலை' எனும் நூலில் காணக்கிடக்கின்றது. இந்நூலில் அவர் மரியாளை நோக்கி 150 செபங்களை முன்வைத்துள்ளார். இவையெல்லாம் 'வாழ்க றோஜாவே' **(Ave, Rose)** என்ற சொற்றொடருடனேயே ஆரம்பிக்கின்றன. மரி யாளின் திருப்புகழ்மாலை. மரியே வாழ்க **(Ave Maria)** றோஜா மலர் ஆகியவை ஒன்று சேர்க்கப்பட்டமையென்பது ஒவ்வொரு 'அருள் மிகப்பெற்றவரே' செபமும் மரி யாளின் திருப்புகழ்மாலையும் இவரது விளக்கத்தின்படி மரியாளுக்கு ஒரு றோஜா மலரை வழங்குவது போன்றது ஆகும். இதே நூற்றாண்டில் இன்னுமொரு குறிப்பிட்டத்தக்கவிடயம் என்ன வெனில் புனித சாமிநாதர், சாமிநாதர் சபையினரது செபமாலையை நிறுவிய பின் மரியாளின் ஏழு ஊழியர்கள் துறவறசபையின் ஏழுநிறுவுநர்கள் **(Servites)** (பணியாளர்கள் சபை) மரியாளின் ஏழு வியாகுலங்களை அடிப்படையாகக்கொண்டு ஒருவித செபமாலையை உருவாக்கி னார்கள். அவர்கள் தாம் கண்ட காட்சிகளில் மரியாளது வெளிப்படுத்தல்களினால் மரியாளின் ஏழுவியாகுலங்களால் உருவான செபமாலைப்பக்திமுயற்சியை ஊக்கப்படுத்தத்தாம் தூண்டப்பட்டார்கள் என்று உரிமை கோருவார்கள்.

இப்பக்தி முயற்சி இவர்களது தனித்துவமான செயற்பாடாகவுமிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு முக்கிய விடயமென்னவெனில் சாமிநாதர் துறவற சபையின் மறைசாட்சியாகிய புனித வெ-றோணா நகரத்து பேதுரு **(St. Peter of Verona) (1206-1252)** என்பவர் இம்மரியாளின் பணியாளர் சபையின் நிறுவுநராகவும் பணியாற்றியதுடன் இச்சபையின் இரண்டாவது நிறுவுநராகவும் கருதப்படுகிறார். இதற்கு இவர் இச்சபைக்குப் பாப்பரசருடைய அங்கீகாரத்தைப் பெறுவதும் உதவியதும் ஒரு காரணமாகும்.

பல நூற்றாண்டுகள் கடந்த பின் புனித மக்சிமில்லியன் கொல்பே மரியாளின் திருப்புகழ்மாலை எனும் பக்தி முயற்சி எவ்வாறு அனைத்துலகிலும் செபமாலை என அழைக்கப்படத்துவங்கியது என்று தமது உடன் துறவற சபையினருக்கு விளக்கப் பின்வரும் உண்மைக்கதையைக் கூறுவார்: ஆரம்பத்தில் 'செபமாலை' மரியாளின் திருப்புகழ்மாலை என்றே அழைக்கப்பட்டது. இதன் காரணம் தாவீதின் திருப்புகழ்களின் தொகுப்பு முழுவது மாக 150 சங்கீதங்கள் இருந்தன. அதேபோலச் செமாலையிலும் நாம் 150 'அருள் மிகப் பெற்ற மரியே' செபத்தைக் காண்கிறோம். பின்வரும் நிகழ்வு அதன் நடைமுறைச் சாத்தியப்பாடு காரணமாக இப்பெயர் மாற்றத்துக்கு இட்டுச்சென்றது: ஒரு பக்தியுள்ள இளைஞன் (பிரான்சிஸ்கன் சபை நவசந்தியாசி 1422 ஆண்டில்) பரிசுத்த கன்னி மரியாளின் திருவுருவத்தை அடிக்கடி றோஜா மலர்களால் அலங்கரிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். காலப் போக்கில் அவர் ஒரு துறவற மடத்தில் இணைந்து கொண்டார். அந்த மடத்தின் நான்கு சுவர்களுக்குள்ளே மரியாளுக்கு மலர்களை கொண்டுவர அவருக்கு வாய்ப்புக்கிட்டவில்லை. இதனால் அவர் மிகவும் கவலையடைந்தார். இவ்வாறு அவர் கவலையில் மூழ்கியிருந்த வேளையில் பரிசுத்த கன்னிமரியாள் ஒரு நாள் அவருக்குத் தோன்றி "பக்தியோடு எனது திருப்புகழ்மாலையைச்சொல்லி செபிப்பீராக" அதன் வழியாக நீர் மிகவும் அழகிய மலர்களால் என்னை அணிசெய்யலாம் என்று கூறினார். எனவே அவர் செபமாலை சொல்லி செபிக்க தொடங்கினார். உடனே ஒவ்வொரு முறை 'அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க' செபம் சொல்லப்பட்டபோதும் பரிசுத்த கன்னிமரியாள் அவரது வாயிலிருந்து வியத்தகு அழகு பொருந்திய ஒரு றோஜா மலரையெடுத்து இவ்வாறு எடுத்த றோஜா மலர்களைக்கொண்டு தனக்கென மாலைக்கோர்த்துகொண்டாள். பரலோக மந்திரம் செபம் சொல்லப்பட்டபோது அம்மாலையில் ஒரு ஒளிரும் லில்லி மலரையும் கோர்த்துகொண்டாள். இதுதான் 'செபமாலை' எனும் பெயர் ஆரம்பித்த விதமாகும்.

செப வேளையில் வழங்கப்பட்ட றோஜா மலர்கள், லில்லி மலர்களின் அடையாளங்கள், செய்திகளுடன் 1422 ம் ஆண்டு இடம்பெற்ற காட்சியினால், அந்த பிரான்சிஸ்கன் சபை நவசந்நியாசிக்கு ஒரு விசேட பிரான்சிஸ்கன் சபையினருக்கான செபமாலை வழங்கப்பட்டதெனலாம். இதுவே பிரான்சிஸ்கன் முடிச்செப மாலை **(Franciscan Crown Rosary)** என்ற பெயருடன் பயன்பாட்டுக்கு வந்தது. இவ்வாறான காட்சிகள் ஒரு பிரான் சிஸ்கன் சபையைச் சேர்ந்தவருக்கு வழங்கப்பட்டாலும் புனித மக்சிமில்லியன் கொல்பே புனித சாமிநாதர் தான் செபமாலையின் நிறுவுநர் என்ற நம்பிக்கையில் மிக உறுதியாக விருந்தார். மேலும் புனித சாமிநாதரி-னால் சரியாகப் புரிந்துகொள்ளப்பட்டு, செபிக்கப்பட்டு வந்த அதே மரியாளின் திருப்புகழ்மாலைதான் பின்னர் உலகனைத்திலும் செபமாலை என ஏற்றுக்கொள்ளப்பட்ட செபம் என்பதையும் அவர் அப்படியே எதுவித சந்தேகமுமின்றி ஏற்றுக்கொண்டார்.

1422ம் ஆண்டு இடம்பெற்ற இக்காட்சி செபமாலையைப் பொறுத் தளவில் மிக முக்கிய மானதொன்று. ஏனெனில் இதனைத்தொடர்ந்து தான் எல்லா மரியாளின் திருப்புகழ் மாலைகளும் செபமாலைகள் என்று கருதப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேலும் பிரான்சிஸ்கன் முடிச்செபமாலை யென்பது எல்லாச் செபமாலைகளும் ஆன்மீக றோஜா மலர்களால் மரியாளை முடி சூடும் பல்வேறு வழிமுறைகளே.

இவ்வாறாக ஒருவிதத்தில் எதிர்மாறாகத்தென்பட்டாலும் புனித சாமிநாதர் செபமாலை யின் நிறுவுநராக இருந்தாலும் அதே புனித சாமிநாதரின் மரியாளின் திருப்புகழ் மாலையை அனைத்துலகிலும் அறியப்படும் முதல் செபமாலை யாக உருவாக்கக் கடவுள் பிரான்சிஸ்கன் சபையினரது பங்களிப்பைப் பயன்படுத்தினார்.

செபமாலை பற்றி மிகவும் பரந்தளவில் எழுதும் திருத்தந்தையாகிய 13ம் சிங்கராயர் (1878-1903) புனித சாமிநாதரின் செபமாலை அதன் ஆரம்பகாலமுதல் சில நூற்றாண்டுகளாகப் பல்வேறு பெயர்களில் அன்றாட செபவேளைகளில் நடைமுறையிருந்து வந்தது என்பதை அறிந்திருந்தார். ஒருமுறை அவர் பின்வரும் பொருத்தமானதொரு கருத்தை பதிவிட்டிருந்தார்.

'கடவுளின் தூண்டுதலோடும், உதவி யுடனும் புனித சாமிநாதர் மரியாளை மையப்படுத்திய பக்தி முயற்சியைப்பற்றி முதன்முதலில் சிந்தித்தபோதும் தொடர்ந்து மீட்பின் மறைபொருட்களை அறிமுகப்படுத்திய இப்பக்திமுயற்சி செபமாலை யென அழைக்கப்பட்டது. ஏனெனில் ஒவ் வொரு முறையும் 'அருள் மிகப் பெற்றவரே' என்னும் வானதூதரின் வாழ்த்துரையுடன் நாம் மரியாளை வாழ்த்தும்போதும், இந்தப்புகழுரை வாழ்த்துக்களைத் திரும்பத்திரும்ப சொல்லும்போதும், மிகவும் இன்பமய மான நறுமணத்தை றோஜா மலர்கள் வெளியிடுகின்றன.

(தொடரும்...)


**திருமண வாழ்வின் 50வது ஆண்டு**
**பொன்விழா வாழ்த்துக்கள்**



**திரு. திருமதி. எமிலியானுஸ் கிளாடிஸ்**

"இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்"
என்ற யேசுவின் பொன்மொழிகளை இதயத்தில் தாங்கி
1973.10.13 ல்திருமண பந்தத்தில் இணைந்து,
இல்லறத்தில் நல்லறம் கண்டு, இனிய நல் மக்கட்பேறு பெற்று
சிறப்புடன் வாழவைத்து, 2023.10.13ல் பொன் விழாக் காணும்
திரு.திருமதி எமிலியானுஸ் கிளாடிஸ் தம்பதியினர்
நூறாண்டு வாழ்ந்து இன்பத்திலும், துன்பத்திலும்,
உடல் நலத்திலும், நோயிலும் ஒருவரை ஒருவர் தாங்கி
வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

பேர்கன்
நோர்வே.

அன்புடன் வாழ்த்தும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மச்சான்மார்,
மச்சாள்மார் மற்றும் உறவினர்கள்

AD-58

## 10 ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 03 . 12 . 1949



விண்ணில் 09 . 10 . 2013

### அருட் சகோதரி புளோரினா பத்திநாதர்

அன்பான இறைவா,
எமது குடும்பத்தில் ஒருவராக, எமது குடும்பத்தில் ஒருவராக, திரு அவையின் பணியாளராக அருட் சகோதரி புளோரினா பத்திநாதர் அவர்களை அழைத்தமைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவருடைய விண்ணக வாழ்வின் பத்தாவது ஆண்டில் அவர் மூலமாக நாங்கள் பெற்றுக் கொண்ட அன்புக்காகவும் பராமரிப்புக்காகவும் உமக்கு நன்றி கூறி, அவருடைய ஆன்மாவுக்கு நித்திய வாழ்வை அளித்தருள உம்மை மன்றாடுகின்றோம்.
எமது சகோதரியோடு எமது அம்மா, ஐயா மற்றும் உறவுகள் அனைவரும் உமது இன்ப சந்நிதானத்தில் பேரின்பம் பெற்று மகிழ்வார்களாக.

அலுக்கை,
அளவெட்டி

குடும்ப உறவுகள்

AD60

## விண்ணக வாழ்வின் 50 ஆவது ஆண்டு நிறைவு

பிறப்பு 25 . 10 . 1928



இறப்பு 01 . 10 . 1973

### அமரர்
### அந்தோனிப்பிள்ளை றோசைறோ

அன்புநிறை அப்பாவே அன்போடு நினைக்கிறோம்
எம்மை விட்டு நீங்கள் பிரிந்து சென்று ஆண்டுகள் ஐம்பது ஆனாலும்
அனுதினமும் உங்களை நன்றியோடு நினைத்து
விழிகளில் நீர் சொரிய இறைவனிடம் உமது நிலை வாழ்விற்காய்
வேண்டுகின்றோம்

Appa! you may be gone, but you'll never be forgotten.

இல 8, ஆருசோ வீதி
மணற்காடு,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

AD56

## அவளுக்கு முதுகெல்லாம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

'என்னைப் புதைச்சு என்ர மகளின்ர கையால மண் போடு நடைசி நாள் மட்டும் நான் சாராயம் தொடமாட்டன்' வார்த்தைகளில் ஒரு அழகான அப்பா கசிந்து கொண்டிருந்தார்.

அந்த மனுசன் இப்பவேற ஆள் ஆகிற்று. இப்பவும் அந்த ஆலமரத்தடி வேரில இருந்து கொண்டு, தன் செல்ல நிலா வரும் வாசலையே பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அவள் முகம்' நிறைந்த சிரிப்போடு ஓடிவந்து, 'அப்பா' என்று அழைக்கும் ஒவ்வொரு முறையும் உலகின் அத்தனை பாதைகளும், அவளின் பாசத்தின் முன்னே தோற்றுக் கொண்டே இருக்கின்றன.

தன் செல்ல நிலாவின் புன்னகைக் காக, அவளின் முகத்தில் ஒரு துளி சோகம் கூடப் படிந்து விடக்கூடாது என் பதற்காக, என் நிலாவின் முகம் அவ மானத்தில் கூனிக்குறுகிகிடக்காது என்பதற்காக அவள் எப்போதும் நல்லா
இருக்கவேணும் என்பதற்காக இது என்ன இதைவிட எளிதாய் எது இருந்தா
லும் அதையும் இழந்து விடுவேன். என்று நினைக்கத் தொடங்கி விடுகிற போது கசிப்புக் கந்தன் கூடக் கடவுளாகி விடுகிறான்.

இனி அவனின் செல்ல நிலாவின் பௌர்ணமிகள் அவனை எல்லா இக்கட்டுக்களையும் தாண்டி, விரல் பிடித்தபடி வழிநடத்திக் கொண்டே இருக்கும். எல்லாருடைய வானத்திலும் ஒரு நிலா இருந்துவிடத்தானே செய்கிறது. உண்மையாக நேசித்துப் பாருங்கள் உங்களுக்கான ஒரு செல்ல நிலா உங்கள் முற்றத்திலும் முளைக்கும்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26 . 11 . 1933



மறைவு 20 . 09 . 2023

### அமரர்
### ஆசீர்வாதம் கிறிஸ்ரியன்

ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவு கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்ந்திடாதிருக்க வேரென இருந்தீரே அப்பா
மாயப்புயல் வடிவில் காலனவன் இன்னுயிர் பறிக்க
சோகத்தைத் தந்து விட்டு சொல்லாமல் சென்றதென்ன?
நல்வழிகள் காட்டி எங்களுக்கு ஒளி கொடுத்த தீபமே
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

AD61

மீளாத்துயருடன்
குடும்பத்தினர்

## ஆண்டவர் அழைப்பின் 3ம் ஆண்டு நினைவுகூரல்

மலர்வு 30 . 04 . 1946



உதிர்வு 17 . 10 . 2020

### அமரர் யோசப்பின் தேவநாயகம்(துவம்)

ஆண்டவரே நீர் தேர்ந்தெடுத்த மக்களின் நல்வாழ்வை நான் காணும்படி செய்யும் (தி.பா 106:5)

எங்கள் தாயே!!! ஆறாது ஆறாது
அழுதாலும் தீராது எம் தாயே!!!
ஆண்டுகள் மூன்று கரைந்ததுவே
இனிய, தாயாக இல்லறத்தில் வாழ்ந்தீர்கள்
அம்மா, ஆயிரம் நிலவுகள் வாழ்வில்
வந்து மறைந்தாலும் ஒற்றை சூரியனாய்
பிரகாசித்தீர்கள் அம்மா.
உங்கள் பிரிவும் நாங்கள் படும் தவிப்பும்
ஆறாது அம்மா.
இறுதிவரை சேர்ந்திருப்பீர் என்றிருந்தோம்!!
இதுதான் சொர்க்கம் என்றிருந்தோம்
இமைப் பொழுதில் காலன் உம்மைக்
கவர்ந்து விட்டான்
இக் கணமும் உங்கள் நினைவால்
கலங்குகின்றோம் அம்மா
ஆண்டுகள் நூறு கடந்தால் என்ன?
அடுத்தடுத்து நாம் வேறு பிறப்பெடுத்தால் என்ன?
அன்றும்!இன்றும்!என்றும்! மாறாது
உங்கள் அன்பும் பாசமும்
உங்கள் ஆத்மா நிலை வாழ்வில்
இளைப்பாற வேண்டி நிற்கின்றோம்

4A அச்சுக்கூட வீதி
யாழ்ப்பாணம்.

பாசமுடன் நினைவுகூறும்
அன்புக்கணவர் போல் தேவநாயகம்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

AD -59

## நெஞ்சம் மறவாத 31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 03 . 06 . 1973



இறப்பு 24 . 08 . 2023

### அமரர்
### மரியஸ்ரான்லி றெக்னோஜெயதரன்

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான
வெற்றி வாகையே அதை இறுதிநாளில்ஆண்டவர் எனக்குத்தருவார்."
(திமோத்தி 4:6-7)

இறைதனில் இன்புற்றிருக்க கனத்த இதயத்துடன்
இறைவனை வேண்டுகின்றோம்

இல 695/25 நாவலர் வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம்

தகவல்
அன்பு மனைவி, உற்றார் உறவினர்
நண்பர்கள்.

AD/57

# யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து ஆர்வலர்கள் விண்ணப்பிக்கலாம்

மரபுவழி ஆற்றுகையாளரை ஊக்கப்படுத்தி நலிந்து செல்லும் கூத்து மரபுக்குப் புத்துயிர் கொடுக்கும் நோக்கோடு யாழ். திருமறைக்கலாமன்றம் தென்மோடிக்கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி ஒன்றினை நடாத்த ஏற்பாடுகள் மேற்கொண்டு வருகின்றது. ஒருவரே தனி ஆற்றுகையாளராகப் பங்கேற்கும் இப்போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்குபற்ற முடியும் எனவும் 3பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டியில் 1 ஆம் பிரிவில் தரம் 6-9 வரையான மாணவர்களும் 2ஆம் பிரிவில் தரம் 10-13 வரையான மாணவர்களும் 3 ஆம் பிரிவில் திறந்த போடடியாக 20-35 வயது வரையானவர்கள் பங்குபற்ற முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் திருமறைக் கலாமன்றம், இல.238, பிரதான வீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர் விபரங்களைப் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

# பொதுநிலையினர் கூட்டம்

யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழக கூட்டம் கழக இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் 28ம் திகதி கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் திரு. இராஜ்குமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மறைக்கோட்டப் பொதுநிலையினர் கழக இயக்குநர்களும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பொதுநிலையினர் கழகத்தின் கடந்தகால, எதிர்காலச் செயற்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் பொதுநிலையினர் அறிவுப் போட்டி ஒக்டோபர் 8ம் திகதியும் முல்லைத்தீவு மறைக்கோட்டப் பொதுநிலையினர் கழக எழுச்சி நாள் நிகழ்வும் தேசிய பொதுநிலையினர் தினமும் 15ஆம் திகதியும் புதுக்குடியிருப்பில் நடாத்தப்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டன.

# யாழ் போதனா வைத்தியசாலை புனித ஆரோக்கிய அன்னை திருவிழா



யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை சிற்றாலய வருடாந்தத் திருவிழா வைத்தியசாலை ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை நிஜந்தன் பிரகாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் 24ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 21 ஆம் திகதி வியாழக்கிழமை ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 23ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது.

திருவிழா திருப்பலியை அமலமரித்தியாகிகள் சபையின் யாழ்.மாகாண முதல்வர் அருட்தந்தை ஜெயந்தன் பச்சேக் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்தந்தை கிருபாகரன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

# பீடப்பணியாளர் பாசறை



இளவாலை புனித யூதாததேயு ஆலய மற்றும் பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலய பீடப்பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட பயிற்சிப்பாசறை நிகழ்வு கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சேந்தான்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

இளவாலைப் பங்குத்தந்தை அருட்தந்தை எரிக் றொசான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெரியவிளான் பங்கின் உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை பிரியந்த மற்றும் பீடப்பணியாளர் காப்பாளர் திரு புஸ்பராசா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து தியானம், கருத்துரைகள், விளையாட்டுக்கள் ஊடாக இந்நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்கள். இந்நிகழ்வில் 50 வரையான பீடப்பணியாளர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

# கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் இயற்கைச் சூழலைப் பாதுகாப்போம் செயற்திட்டம்

கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் ‘இலங்கையின் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்கான அடிக்கல்’ என்னும் செயற்றிட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான கள அனுபவச் சுற்றுலா நிகழ்வு கடந்தவாரம் நடைபெற்றது.

நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஜீவன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்கள் இலங்கையில் இயற்கை வளங்கள் நிறைந்த திருகோணமலையில் உள்ள புறா மலை, நிலாவெளிக் கடற்கரை, திருக்கோணேஸ்வரம், ராவணன் வெட்டு மற்றும் கிண்ணியா சுடுநீர் ஊற்று போன்ற இடங்களைத் தரிசித்தனர்.

இயற்கையின் முக்கியத்துவத்தையும், அதனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்து கொள்வதை நோக்காகக் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மூன்று பாடசாலைகளை இணைத்து முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில் 50 வரையான மாணவர்களும், 07 வரையான ஆசிரியர்களும் கரித்தாஸ் வன்னி கியூடெக் திட்ட இணைப்பாளரும், பணியாளர்களும் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

# மன்னார் புனித செபஸ்ரியார் ஆலயம் திறப்புவிழா

மன்னார் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள புனித செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெற்று வந்த புனரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் பேராலய திறப்புவிழா 24ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை பங்குத்தந்தை அருட்தந்தை அகஸ்ரீன் புஸ்பராஜ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னான்டோ அவர்கள் கலந்து புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்தார்

# புனித மிக்கேல் திருநாள்

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை இராஜசிங்கம் அவர்களின் தலைமையில் 29ஆம் திகதி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. 20ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்த நாள் வழிபாடுகள் ஆரம்பமாகி நடை பெற்றுவந்த நிலையில் 28ஆம் திகதி வியாழக்கிழமை நற்கருணை விழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெயக்குமார் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

# மணற்காடு வேளாங்கண்ணி அன்னை ஆலய திருவிழா

மணற்காடு பங்கிலுள்ள கடற்கரை வேளாங் கண்ணி அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா 24ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை பங்குத்தந்தை அருட்தந்தை ஜோன் குரூஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது. திருவிழா திருப்பலியை சல்வற்றோறியன் சபையை சேர்ந்த அருட்தந்தை நிர்மல் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

திருவிழா அன்று மாலை மணற்காடு அந்தோனியார் ஆலயத்திலிருந்து வேளாங் கண்ணி அன்னை ஆலயம் வரை மெழுகுவர்த்திப் பவனியும் இடம்பெற்றது.


## அகவை நூறில் ஆத்மா நித்தியத்தில் இளைப்பாற செபிக்கிறோம்

பிறப்பு 19 . 09 . 1923



இறப்பு 22 . 09 . 1995

அமரர்
சுவாம்பிள்ளை தம்பித்துரை
(பிரான்சிஸ்பிள்ளை)
(ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி. நாட்டுக்கூத்து. அண்ணா வி. தம்பித்துரை)
(புனிதவனன் கத்தோலிக்க அச்சுக்கோப்பாளர்)

“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வார்”
(யோவான் 11:25)

வெள்ளாம் போக்கட்டி
கொடிகாமம்.

பிரிவால் துயருறும் பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

AD/55

பிறப்பு 02 . 17 . 1943

இறப்பு 06 . 10 . 2023




என்றும் உங்கள் நினைவுடன்
செல்வதி – பெவன்


# மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய குருக்கள் இருவர்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு திருத் தொண்டர்கள் குருக்களாக திருநிலைப் படுத் தப் பட்டுள்ளனர்.

செப்ரெம்பர் 30 ஆம் திகதி மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னான்டோ அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு திருப்பலியில் திருத்தொண்டர்களான றெனால்ட் சகாய தர்சன், சலமோன் ஆகியோரே குருக்களாகத் திருநிலைப்படுத்தப் பட்டுள்ளனர்.

புதிய குருக்கள் பணி வாழ்வில் அர்ப்பணத்துடன் நிலைத்திருந்து சார்பாக இவர்களை வாழ்த்துகின்றோம்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.